R.N.I.No.TNTAM/2000/3629, Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office. November 2018



## வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையில் விசேஷ வேதவகுப்பில் கலந்துகொண்டவர்கள்

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.15 P.M
Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M
& Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*
*Office Address*
*The Word of Christ, D/5 Rajan Nagar*
*Batlagundu -624202, DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA


Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

மரம் 18 நவம்பர் 2018 கனி 12



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:15 - 5:30 pm on 31 meter band on Sri Lanka radio.

World Evangelism Gospel Media

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 219

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. அகாஸ்வேரு ராஜா யாருடைய வார்த்தையின்படியே, எந்தப் புருஷனும், தன் வீட்டுக்குத் தானே அதிகாரியாயிருக்கவேண்டும் என்ற கட்டளையை சகல நாடுகளுக்கும் எழுதி அனுப்பினான்?
2. வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன் என்றவன் யார்?
3. தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்க மாட்டார் என்றவன் யார்?
4. விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே எதையும் காண்பித்தார்?
5. சமுத்திரங்களின் முழக்கத்தையும், அலைகளுடைய அலைகளின் இரச்சலையும், ஜனங்களின் அமளியையும் தேவன் அமர்த்துகிறாரா?
6. இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம் என்றவன் யார்?
7. கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு எப்படியிருக்கிறது? அக்கிரமக்காரருக்கோ எவ்விதம்?
8. எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே என்றவர் யார்?
9. விருந்து வீட்டுக்குப் போவதிலும் எந்த வீட்டுக்குப் போவது நலம்?
10. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் என்னவானோம்?

## வேதாகம ஆய்வு... 4



1. பாலஸ்தீனாவிலிருந்து 30 மைலுக்கப்பாலிருந்த பெலிஸ்தருடைய ஐந்து பட்டணங்களில் ஒன்று
2. இது ஏனாக்கியருக்கு ஒரு புகலிடமாக இருந்தது.
3. இது பாலஸ்தீனாவிலிருந்து எகிப்துக்குப் போகிற வழியில் இருந்தது.
4. அதில் வேசிப்பிள்ளைகள் வாசம்பண்ணினார்கள்.
5. தற்காலத்தில் இதைப்பற்றிய விசேஷம் ஒன்றுமில்லை.

யோசுவா11:22, சகரியா9:6

**அஸ்தோத்**
**Ashdod**

சிறுவர் பகுதி

# உன் தாய் தகப்பனுடைய போதகம்

வேதவாசிப்பு: நீதிமொழிகள் 1:8-9



"என் மகனே, உன் தகப்பன் புத்தியைக்கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே" (நீதிமொழிகள் 1:8). அப்பாவுக்கு ஒன்னுந்தெரியாது, அம்மா சுத்தம் என்று சொல்லி அநேக பிள்ளைகள் தங்களுடைய தகப்பனுடைய புத்தி மதிகளையும் தாயினுடைய போதகத்தையும் அசட்டை செய்துவிட்டு பின்நாட்களில் படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?

உங்களை பெற்றெடுத்த பெற்றோர் உங்களை பெற்றவர்கள் என்பதை மறந்து விட்டு அவர்களுக்கு ஒன்னுந்தெரியாது என்று சொல்லாதிருங்கள். வேதம் உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தை தள்ளாதே என்று சொல்லுகிறது. உங்களுக்கு முதல் போதகர் அல்லது ஆசான் பெற்றோர்களாக இருக்கிறார்கள். உங்களைப் பெற்றவர்களுக்குத் தெரியும் உங்களை எப்படி வழிநடத்தவேண்டுமென்று, உலகத்தைப் பார்த்தும் உங்களுடைய நண்பர்களைப் பார்த்தும், உறவினர்களைப் பார்த்தும் ஏமாந்துபோகாதிருங்கள். "பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேட்டு, புத்தியை அடையும்படி கவனியுங்கள்" (நீதிமொழிகள் 4:1). தேவன் அவர்களைக் கொண்டு பேசுவார். உங்களுக்கு பாதுகாவலராக அவர்களையே பூமியில் வைத்துள்ளார். மற்றவர்களை நம்பிமோசம்போகாதிருங்கள்.

உங்களுடைய பெற்றோர்களுக்கு செவி கொடுத்து. அவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள். அது கர்த்தருக்குப்பிரியமானது. அவர்களிடம் பொய் சொல்லாதிருங்கள். அவர்களை ஏமாற்றி பணம் பெற்றுக்கொள்ளாதிருங்கள். உங்களுக்கு செல்போன் தேவையில்லை. உங்களுக்கு வயதுவரும்போது, அல்லது நீங்கள் ஒரு வேலைக்கு வரும்போது உங்களுக்கு செல்போன் தேவை அப்பொழுது வாங்கினால் போதும். சிம்கார்டில் ஆபாச படங்களை டவுன்லோடு செய்துகொண்டும், கம்யூட்டர் சென்டர்களுக்கு சென்று ஆபாச படங்களை பார்ப்பதும் உங்களுடைய வாழ்க்கையை பாதிக்கும். உங்களுடைய வயதுள்ளவர்களுடன் பழகுங்கள். தேவையற்ற காரியத்தை பேசாமல், பாடசம்பந்தமாக பேசுங்கள். கிடைக்கும் நேரத்தில் அதிகமான வார்த்தைகளை மனப்பாடம் செய்யுங்கள். உங்கள் வாழ்நாளெல்லாம் அது உதவியாயிருக்கும். உலகநாடுகளைப் பற்றித் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள். நேரத்திற்கு படியுங்கள், விளையாடுங்கள், நித்திரைக்கு செல்லுங்கள். காலையில் உங்களுடைய பெற்றோருக்கு ஸ்தோத்திரம் சொல்லுங்கள். தேவனை நோக்கி ஜெபிக்க மறவாதிருங்கள். கூடுமானால் ஒரு வாரத்திற்கு அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு வசனத்தையாவது மனப்பாடம் செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம்.

## மனப்பாட வசனம்

"பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது" கொலோசெயர் 3:20



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 18 நவம்பர் -2018 கனி - 12

ஆசிரியருரை

# ஆத்தும இரட்சிப்பு
## Soul Saving



**நாம்** ஆத்துமாவில் வாழ்கின்றோம் இந்த ஆத்துமா இரட்சிக்கப்படவேண்டும். சரீரத்தில் நம்முடைய தேவைகளுக்காக பல காரியங்களை செய்து கொள்கிறோம். அது நம்முடைய சரீர பாதுகாப்பிற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஆகையால் சில வருடங்கள் இந்த மண்ணான சரீரத்தில் வாழ்ந்து பின்பு தேவன் நியமித்திருக்கிற இடத்திற்கு ஆத்துமா கடந்து செல்கிறது. இந்த ஆத்துமா பாதாளத்திற்கு அதாவது அவியாத அக்கினிக்கு தப்புவிக்கப்படவேண்டுமானால் நாம் இந்த ஆத்துமாவில் பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறபடி நடக்க வேண்டும். யாக்கோபு என்ற தேவ தாசன் சொல்லுகிறார்: "நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்கிறார் (யாக்.1:21). நாம் நம்முடைய வாழ்க்கையில் களையப்படவேண்டியவைகளை களைந்து இருதயத்தில் வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு நோயாளிக்கு ஆப்ரேஷன் செய்ய இருக்கும்போது அவன் வழக்கமாக செய்யும் தவறை செய்யமுடியாது, அப்படி அவன் மீறி செய்வானேயானால் அவனுக்கு ஆப்ரேஷன் செய்யமாட்டார்கள். அவன் பிழைப்பது கடினமாகிவிடும். நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்பட ஒரே வழிதான் உண்டு. ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிற கர்த்தருடைய வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். அப்பொழுது தான் நம்முடைய ஆத்துமாக்களுக்கு இரட்சிப்புகிடைக்கும்.

கர்த்தருடைய வசனம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் ஆத்துமாவில் இரட்சிக்கப்படுகிறார்கள். முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபை வளர்ந்துபெருகிற்று. ஆதி அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வசனத்தை யூதர்களுக்கு மட்டுமல்ல புறஜாதிகளுக்கும் பிரசங்கித்தார்கள். "யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்" (அப்.13:50). ஆனால் புறஜாதிகள் அவர்களை ஏற்றுக்கொண்டார்கள். "புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ

அவர்கள் விசுவாசித்தார்கள்" (அப்.13:38). இன்றைக்கும் பாரம்பரிய மக்கள் எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கர்த்தருடைய வசனத்தை புறம்பாக்கிப்போடுகிறார்கள். ஆகையால் புறஜாதி மக்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நீங்கள் இந்த புறஜாதி மக்களைப்போல கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அப்படி ஏற்றுக்கொள்ளும்போது உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது" என சங்.15:7-ல் வாசிக்கிறோம். ஆத்துமாவை உயிர்ப்பிக்கக்கூடியது கர்த்தருடைய வசனமே. இதற்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட முயற்சியுங்கள்.

ஆத்துமா இரட்சிக்கப்பட ஆண்டவர் இயேசுவிடம் கற்றுக்கொள்ளவேண்டும். வேதாகம கல்விக்கூடங்கள் நிறைந்து காணப்படுகிறது. ஆனால் அங்கே கிறிஸ்துவினுடைய போதனைகள் இருக்கிறதா? பரிசுத்த வேதாகமத்தின்படி நடக்கிறார்களா? என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும். வேதாகமத்திற்கு விரோதமாக நடக்கிற கூட்டங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. இடுக்கமான வாசல் வழியாக பிரவேசிக்கிறவர்கள் சிலர் என்றே பார்க்கிறோம். ஆகையால் கேட்டின் வாசலையே அநேகர் நாடுகிறார்கள். இயேசு சொல்கிறார்; "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்கிறார் (மத்.11:29). எத்தனை பாடசாலைகள் இருந்தாலும் நாம் ஆண்டவர் இயேசுவின் பாதம் அமர்ந்து கற்றுக்கொள்ளும் அநுபவம் தனிச்சிறப்பானது. ஏனெனில் அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறார். நம்முடைய கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொள்ளுவார். அவர் கொடுக்கிறதான வசனத்தை அந்த நுகத்தை நம்மீது ஏற்றுக்கொண்டு கற்றுக்கொள்ளவேண்டும். என்னுடைய கோரிக்கையை முதலாவது அவர் நிறைவேற்றட்டும் பின்பு அவர் என்னசொல்கிறாரோ அதன்படி செய்கிறேன் என்று சொல்லுகிறவர்கள்தான் அதிகம். ஆனால் ஆண்டவர் சொல்லுகிற காரியம் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார்.

நீங்கள் பள்ளியில் வேலை பார்க்கிற ஒரு ஆசிரியையாக இருக்கலாம் ஆனால் உங்களுடைய பிள்ளைக்கு நீங்கள் ஆசிரியையாக வீட்டில் இருக்கமுடியாது. நீங்கள் செய்யவேண்டியது என்ன? அவனை ஆண்டவருடைய பாதத்திற்கு கொண்டு செல்லவேண்டும். அப்படியானால் புதியஏற்பாட்டை அவனுக்கு வாங்கிக்கொடுத்து அதைப் படிக்கச் சொல்லவேண்டும். அப்பொழுது அவன் இயேசுவின் அநேக போதனைகளை படித்து அதன்படி தன்னை மாற்றியமைத்துக்கொள்ளுவான். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்" (எபி.10:38). நோவா, ஆபிரகாம் போன்றோரெல்லாம் தங்களோடு வாழ்ந்தவர்களுக்குள்ளே நீதிமான்களாக வாழ்ந்தார்கள். ஆகையால் அவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருந்து அவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் காப்பாற்றி ஆசீர்வதித்தார். ஒருவேளை அவர்கள் பின்வாங்கிப் போயிருப்பார்களேயானால் அவர்கள்



## ஆசிரியர் கடிதம் போட்டியாளர்களுக்கு...



உங்களை இக்கடிதத்தின் மூலம் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

அநேக வயதான சகோதர, சகோதரிகள் வேத அறிவுப்போட்டியில் கலந்து கொள்ளுகிறீர்கள் இரவு பகலாக தேடி வேத வசன ஆதாரத்துடன் பதில் எழுதுகிறீர்கள். சிலர் வேத வசனங்களை கண்டுபிடிக்கும் வரை தூங்குவதில்லை. தாவீதைப்போல: "கர்த்தாவே, இராக்காலத்தில் உமது நாமத்தை நினைத்து, உமது வேதத்தைக் கைக்கொள்ளுகிறேன்" என்ற சங்.119:55 ன்படி நீங்களும் வேத வசனத்தைக் கைக்கொண்டு வேத சத்தியங்களை இப்போட்டியின் மூலம் அறிந்துகொண்டு வருவதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். ஒவ்வொரு மாதமும் இந்த நடமாடும் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' வேதபள்ளியில் 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்வது குறித்து மிகவும் சந்தோஷம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆசிரியர்

### வேத அறிவுப்போட்டி எண் 216 ல் வெற்றிபெற்றவர்கள்

38.A.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
39.J.இளவரசிஜோபிதா - துடியலூர்
40.S.R.பெரியசாமி - சேலூர்
41.Mrs.சாந்தாபழனி - தருமபுரி
42.Mrs.ஜெமிநல்லையா - கோவை
43.Mrs.பாலின்டேனியல் - கீழ்பாக்கம்
44.S.ஜாய்ஸ்சந்திரகாந்தா - நெல்லூர்
45.P.சந்திராடேனியல் - திருநெல்வேலி
46.Mrs.இந்திராஜெபக்கணி - தூத்துக்குடி
47.S.A.சாமுவேல் - வேலூர்
48.Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
49.E.ஜாய்ஸ் ஹெலன் புனிதா - சென்னை
50.Mrs.தேவதாதேவபிரியம் - சென்னை
51.Mrs.நவரத்தினம் - நாசரேத்
52.Mrs.மேரிஜெபராஜ் - சென்னை
53.N.ஜெபத்தாய் - நாசரேத்
54.S.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
55.Mrs.தேவபுஸ்பம் - தூத்துக்குடி
56.A.அருள்செல்வராஜ் - திருநெல்வேலி
57.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
58.K.பாலம்மமாள் - தூத்துக்குடி
59.Mrs.கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
60.Mrs.சுசிலாராஜசிங் - நெல்லை
61.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
62.M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
63.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
64.Mrs.பியூலாஜேசுராஜன் - புதுச்சேரி
65.J.ஜாய்கமலம் - நாசரேத்
66.Mrs.ராஜம்மாள் - சென்னை
67.Mrs.பிரமிளாரேவதி - கோவை
68.S.D.டேவிட்செல்வராஜ் - தூத்துக்குடி
69.J.S.ஜெயமேரிதாய் - திண்டுக்கல்
70.B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்




### வேத அறிவுப்போட்டி எண் 217 ல் வெற்றிபெற்றவர்கள்

38.Mrs.எபிநேசர்எட்வேர்டு - கடலூர்
39.B.ஞானதீபம்ஜெபராஜ் - திருநெல்வேலி
40.Mrs.தேவதாதேவபிரியம் - சென்னை
41.K.ரத்னாபாய்பிரசாத் - மதுரை
42.Mrs.ஞானம்பிலிப் - கோவை
43.Mrs.வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
44.Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
45.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
46.T.ஏஞ்சலின்நேசமலர்- கன்னியாகுமரி
47.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
48.S.தங்கம் - கன்னியாகுமரி
49.Mrs.தேவபுஸ்பம் - தூத்துக்குடி
50.N.ஜெபத்தாய் - நாசரேத்
51.J.ஜாய் கமலம் - நாசரேத்
52.K.ராணி - தூத்துக்குடி
53.J.செல்வராஜ் - தூத்துக்குடி
54.Mrs.பாக்கியதாய் - தூத்துக்குடி
55.Mrs.இந்திராஜெபக்கனி - நாசரேத்
56.Mrs.செல்வாஞானம் - காடுவெட்டி
57.N.A.அருள்செல்வராஜ் - திருநெல்வேலி
58.K.சாந்தி - வாடிப்பட்டி
59.R.சுசிலாராஜசிங் - வள்ளியூர்
60.S.அன்னம்மாள் - தூத்துக்குடி

**வேத அறிவுப்போட்டி**
**எண் 216 ன் விடைகள்**

| | |
|---|---|
| 1.லேவி | - மல்.2:5 |
| 2. கபடமில்லாத | - கொலோ.3:22 |
| 3. யாக்கோபு | - ஆதி.46:26 |
| 4. பவுல் | - 1தெச.4:13 |
| 5. பிரயாணம் | - யாத்.40:36 |
| 6. பவுல் | - 2தெச.1:12 |
| 7. அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது - லேவி.21:9 | |
| 8. தீமோத்தேயுவுக்கு | - 1தீமோ.6:13 |
| 9. அவன் குமாரத்திக்கு | - எண்.27:8 |
| 10. கன்னானாகிய அலெக்சந்தர் | - 2தீமோ.4:15 |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 217 ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. அருவருப்புகளின்படி | - உபா.18:9 |
| 2. மெல்கிசேதேக்கு | - எபி.7:6 |
| 3. யோசுவா | - யோசு.24:14 |
| 4. தேவனிடத்தில் | - யாக்.1:5 |
| 5. சாமுவேல் | - 1சாமு.8:19 |
| 6. ஆசீர்வதிக்க | - 1பேது.3:9 |
| 7. யெதிதியா | - 2சாமு.12:25 |
| 8. கடனாளிகளாயிருக்கிறோம் | - 1யோவா.4:11 |
| 9. யெரொபெயாமின் | - 1இரா.14:11 |
| 10. யோவான் | - 3யோவா.3 |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 216 ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1.A.ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 2.Mrs.அன்புக்கமலம் | - சிவகங்கை |
| 3.J.செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 4.Mrs.ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 5.K.சாந்தி | - வாடிப்பட்டி |
| 6.Mrs.பாலின் மார்ட்டின் | - சிவகங்கை |
| 7.Mrs.வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 8.T.ராஜாத்தி | - கோம்பை |
| 9.Mrs.ரத்தினாபாய் பிரசாத் | - மதுரை |
| 10.J.ரேச்சல் தமிழரசி | - பசுமலை |
| 11.Mrs.ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 12.Mrs.கிறிஸ்டோபல் | - கோவை |
| 13.Mrs.ஞானதீபம்ஜெபராஜ் | - திருநெல்வேலி |
| 14.Mrs.ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 15.R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 16.Mrs.ஞானம்பிலிப் | - கோவை |
| 17.S.லதா | - தேனி |
| 18.Mrs.தேவி ராஜசிங் | - திருப்பூர் |
| 19.R.ஜெபக்கனி மார்க்ஸ் | - கூமாபட்டி |
| 20.Mrs.கெத்சிசெல்வின் | - சென்னை |
| 21.Mrs.ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 22.J.மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 23.Mrs.அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 24.G.பூங்கோதை | - கோபி |
| 25.R.அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 26.S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 27.Mrs.ஃபிரங்கலினாஜான் | - ஊட்டி |
| 28.Mrs.மேரிநிர்மலா | - மதுரை |
| 29.Mrs.ஜெனிதர்மராஜன் | - திருநெல்வேலி |
| 30.Mrs.ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 31.J.விக்டர் சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி |
| 32.D.சாந்தாதேவி | - தேனி |
| 33.K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 34.Mrs.அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 35.Mrs.ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 36.E.அதிசயம் | - பனைகுடி |
| 37.T.ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 217 ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1.S.ரவிச்சந்திரன் ஜெபக்கனி | - கூமாபட்டி |
| 2.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 3.E.அதிசயம் | - பனைகுடி |
| 4.Mrs.ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 5.Mrs.ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 6.D.அன்புக்கமலம் | - கலுங்குவிளை |
| 7.Mrs.பாலின்மார்ட்டின் | - சிவகங்கை |
| 8.M.இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 9.Mrs.பியூலாஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 10.R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 11.R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 12.Mrs.நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 13.A.டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 14.Tmt.மரகதம்திரவியம் | - கோம்பை |
| 15.G.நிர்மலாவின்சென்ட் | - திருப்பூர் |
| 16.S.செல்வராஜ்சாலமோன் | - வள்ளியூர் |
| 17.T.ராஜாத்தி | - கோம்பை |
| 18.J.விக்டர்சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி |
| 19.Mrs.ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| 20.A.அருள்ராஜ் | - திருச்சி |
| 21.Mrs.சாந்தாபழனி | - தருமபுரி |
| 22.M.கௌசல்யா | - திருச்சி |
| 23.Mrs.ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 24.E.ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 25.Mrs.ராஜம்மாள் | - சென்னை |
| 26.Mrs.ஃபிரங்கலினாஜான் | - ஊட்டி |
| 27.J.S.ஜெயமேரிதாய் | - திண்டுக்கல் |
| 28.Mrs.ரூபவல்யா | - நாசரேத் |
| 29.Mrs.கெத்சிசெல்வின் | - சென்னை |
| 30.S.ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 31.R.அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 32.Mrs.ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 33.Mrs.ஜெமிநல்லையா | - கோவை |
| 34.P.சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 35.Mrs.கிறிஸ்டோபல் | - கோவை |
| 36.S.சாந்தகுமாரி | - நாசரேத் |
| 37.A.ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |



மேல் அவர் பிரியமாயிருந்திருக்கமாட்டார். "நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.10:39). ஆகையால் உங்களுடைய ஆத்துமாவைக்குறித்த விஷயத்தில் சற்று கவனமாக இருங்கள். உங்களுடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. அது நித்தியத்தில் தேவனோடு வாழவேண்டும். ஆகையால் உங்கள் ஆத்துமா ஈடேற விசுவாசிகளாக தொடர்ந்து செயல்படுங்கள். ஆண்டவரின் பாதம் அமர்ந்து கற்றுக் கொள்ளும்போது அதற்கு பலன் உண்டு. ஒரு மாணவன் ஆசிரியரிடம் கற்றுக்கொள்ளும்போது பலன் அடைகிறான். அதைப்போல இயேசுவிடம் நாம் கற்றுக்கொள்ளும்போது "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்" என்கிறார் பேதுரு (1பேது.1:9). உலகத்திலே படித்தவர், படிக்காதவர், எல்லோருமே ஏதோ விதத்தில் சம்பாதிக்கிறார்கள் குடும்பங்கள் நடைபெறுகிறது. ஆனால் ஆத்துமா விஷயத்தில் எல்லோருமே அவரவருடைய ஆத்துமாவை காத்துக்கொள்ளமுடியாது. நம்மிடத்தில் அசையாத விசுவாசம் இருக்குமானால் நாம் நம்முடைய ஆத்தும இரட்சிப்பை அடையமுடியும். இல்லையேல் நாம் ஆத்துமாவில் இரட்சிக்கப்படுவது கூடாதகாரியமாகிவிடும்.

உங்களுடைய ஆத்துமா குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படவேண்டும். அதற்கு நான் என்னசெய்யவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். எல்லாரும் குற்றம் செய்து தேவமகிமையற்றவர்களானோம். ஆனால் நாம் மனந்திரும்பும்போது மன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறோம். சிலுவையில் தொங்கிய கள்ளன் குற்றவாளி, ஆனால் அவன் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு இயேசுவை நோக்கி உம்முடைய ராஜ்யத்தில் அடியேனை நினைத்தருளும் என்று கேட்டபோது; அவன், அந்த நிமிடமே மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறான். அதைப்போல் ஐசுரியவானாக வாழ்ந்து மரித்தவன் பாதாளத்திலே வேதனைப்படுகிறான். அவன் பூமியிலிருந்த நாட்களில் லாசருவை நினைக்கவில்லை அவனுக்கு உதவி செய்யவில்லை, அவன் மனந்திரும்பவில்லை, ஆனால் பாதாளத்தில் இருந்துகொண்டு இந்த இடத்திற்கு என் சகோதரர்கள் வந்துவிடாதபடி அவர்களுக்கு செய்தி அனுப்பும்படியாக ஆபிரகாமைப்பார்த்து கேட்டான். அவனுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அது கூடாததாயிருந்தது. நாம் பூமியில் தேவனிடத்தில் விசுவாசம் கொள்ளும்போது ஆத்தும இரட்சிப்பை அடைகிறோம். சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்கிறான் (சங்.16:10). அந்தப்படியாக மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் முதற்பலனாகிய இயேசு இருக்கிறார். தேவன் அவரை எழுப்பினார்.

ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன? "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை" என காண்கிறோம் (மாற்.12:30). நீங்கள் முழுமையுமாக தேவனிடத்தில் அன்புகூருகிறீர்களா? அன்புகூருகிறேன் என்று சொல்லி ஆண்டவரிலும் மேலாக உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூருவீர்களானால் தேவனுடைய அன்பை இழப்பீர்கள். ஏனெனில் என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் உலகத்தில் உள்ளவைகளைக் காட்டிலும் தேவனிடத்தில் முழுமையுமாக அன்பு செலுத்துங்கள். சிலர் சொல்லுவார்கள் என் சரீரம் இங்கே இருக்கிறது.

ஆனால் என்னுடைய நினைவு எல்லாம் வெளிநாடு சென்றுள்ள என் மகன் எப்படி இருக்கின்றானோ என்ற கவலைதான் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஏதாவது ஒன்று நடந்துவிட்டால் அவர்கள் தங்களுடைய விசுவாசத்தையே மறுதலித்துப்போய்விடுவார்கள். அப்படி அநேகர் பின்மாற்றமாகி போனதுண்டு. நீங்கள் உங்களுடைய இருதயத்தையும், ஆத்துமாவையும், மனதையும், பலத்தையும் கர்த்தருடைய சமுகத்தில் முழுமையுமாக கொடுக்கும்போது உங்களை உண்டாக்கின தேவன் உங்களை கண்ணோக்கிப்பார்ப்பார். இந்த விசுவாசத்தை ஆபிரகாம் பெற்றிருந்தார். அந்தவிதமான விசுவாசத்தை நீங்களும் பெற்றுக்கொண்டு; "உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" என்று 1தெச.5:23-ல் சொல்லப்பட்டபடி காக்கப்பட்டும். அநேகர் சரீரத்தில் வெளிப்பிரகாரமாக குற்றமற்றவர்களாக நடந்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆத்துமாவில் அல்லது ஆவியில் அசுத்தர்களாக காணப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மூன்றிலுமே குற்றமுள்ளவர்களாக வாழ்கிறார்கள். ஒரு மனிதன் செய்யும் தவறை கண்களால் பார்த்துவிடலாம். ஆனால் ஆவிக்குரிய குற்றம் செய்கிறவர்களையும், ஆத்துமாவில் குற்றம்செய்கிறவர்களையும் நாம் அறியோம். ஆனால் தேவன் அறிவார். நியாயத்தில் அப்படிப்பட்டவர்களைக் கொண்டுவந்து நிறுத்துவார். அப்பொழுது அவனுடைய குற்றங்கள் வெளியாகும். ஆகையால் நீங்கள் ஆத்துமாவில் இரட்சிக்கப்பட உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கவேண்டும். ஆகையால் "யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என காண்கிறோம் (எபி.12:14).

**நம்முடைய ஆத்துமாவை யாரிடம் ஒப்படைக்கவேண்டும்?**

ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு திரும்பும் என வேதத்தில் படிக்கிறோம். இயேசு சிலுவையில் ஜீவனை விடும் வேளையில் பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றார். தன்னை அனுப்பின பிதாவின் வேலைகளை முடித்து ஜீவனை ஒப்புக்கொடுத்தார். பூமியில் ஆத்துமாவில் சிருஷ்டிக்கப்பட்ட நீங்களும் நானும் அதே காரியத்தையே செய்யவேண்டும். மரண தருவாயில் அநேகர் தங்களுடைய பிள்ளைகளை பார்க்கவிரும்புவார்கள், அல்லது அவர்கள் யாரை அதிகமாக நேசித்தார்களோ அவர்களை பார்க்கவிரும்புவார்கள். ஆண்டவர் தம்மை அனுப்பின பிதாவை நோக்கிப் பார்த்தார். அவரிடம் தன்னை ஒப்புக்கொடுத்தார். பேதுரு சொல்லுகிறார்; "தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" என்கிறார் (1பேது.1:9). நீங்கள் அந்தவிதமாக ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? அல்லது எவனை விழுங்கலாமோ என்று கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல வலம் வரும் பிசாசுக்கு உங்களை ஒப்புக்கொடுக்கப்போகிறீர்களா? இன்றே சிந்தித்து உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை ஆண்டவர் இயேசுவுக்கும் அவருடைய திருப்பணிவேலைகளுக்கும் ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது பரலோகத்தின்தேவன் தாமே உங்களை கண்ணோக்கிப்பார்த்து, உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட உதவிடுவார்! நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**
**ஆம் எனில் ☑ குறியிடவும்**



## 2. கிறிஸ்துவின் சபை என்பது எது?

*தற்சோதனை பகுதி - 2*

1. அது ஒரு கட்டிடம் ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
2. பரிசுத்த ஆசாரியக்கூட்டம் ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
3. மனிதர்களைத் தலையாகக் கொண்டது ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
4. கிறிஸ்துவை தலையாகக் கொண்டது ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
5. உலகராஜ்யம் ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
6. கிறிஸ்துவின் ராஜ்யம் ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
7. தேவாலயம் ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
8. சரீரமாகிய சபை ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
9. கிறிஸ்து இல்லா அஸ்திபாரம் ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------
10. அவரை அஸ்திபாரமாகக் கொண்டது ☐ வசன ஆதாரம்--------
------------------------------------------------------------

**இது உங்களுக்கான நற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

செய்யவேண்டியதை உணர்த்துகிறது. ஏதோ, இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதில் மனிதன் செயல்படாமல் இருப்பதல்ல.

10. இரட்சிக்கப்படுவது என்பது கேள்வியின் நோக்கம். இரட்சிப்பது வேறொருவரால் செய்யப்படுகிறது. ஆனால் இரட்சகரால் இரட்சிக்கப்படும்படி மனிதன் செய்ய வேண்டிதென்ன?

**1. அடுத்த கேள்விக்கு நாம் எப்படி கடந்து செல்ல முடியும்?**

உணர்வுகளாலோ, கருத்துக்களாலோ அல்லது தவறான எண்ணத்தினாலோ அல்ல. பிரசங்கியார்கள் அல்லது மதத் தலைவர்களால் அல்ல அவர்கள் அமைப்புக்கு அமைப்பு மாறுபடுகிறார்கள்.ஒவ்வொரு வேளையும் கேள்வியும் பதிலும் ஒன்றாக சொல்லப்பட்டுள்ள வேதாகமத்திற்குச் செல்லுவதைவிட வேறொரு எளிய தெளிவான வழியில்லை. இது வேதவாக்கியங்களின்படி கேள்விக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. உண்மைகளையும் இது கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. இந்தக் கேள்வி கிறிஸ்துவானவர் மரித்து அவருடைய இரட்சிக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்க துவங்குமுன் மூன்று முறை மட்டுமே விரிவாக இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

பெந்தேகோஸ்தே நாளிலே யூதர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டனர்.

அன்றிருந்த மக்களின் மத நம்பிக்கை சார்ந்த சூழலையும் அந்த பிரசங்கத்தையும் சுருக்கமாகப் பாருங்கள். யூதர்களின் பண்டிகை ஒன்றில் பங்குபெறும்படி வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் இவர்கள். அவர்கள் உண்மையான ஒரே தேவனைத் தொழுது கொண்டனர்.

**37-ம் வசனம் கேள்வியாகும்**

மக்கள் பேதுருவின் பிரசங்கம் அவர் இருதயத்தில் குத்திற்று.

இதற்குரிய பதில் 38-ம் வசனத்தில் இருக்கிறது.

1. மனந்திரும்பு; மனமாற்றம் பாவத்தை விட்டு விடும்படியான தீர்மானத்தை செய்தல்.

2. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.

3. மனந்திரும்புதலைப் போலவே ஞானஸ்நானமும் முக்கியமானது. அவைகள் ஒரே நோக்கத்தைக் குறிக்கிறது. அது பாவ மன்னிப்பே. நம்முடைய பாவங்கள் கழுவப்பட்டதால், மனந்திரும்ப வேண்டுமென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள்.

4. ஈஸ் என்கிற கிரேக்க வார்த்தை முன்னோக்கி குறிக்கிற வார்த்தை, பின்னோக்குவதை அல்ல.


இந்தக் கேள்வி பிலிப்பிய சிறைச்சாலை அதிகாரியால் கேட்கப்பட்டது (அப்.16:30).ஒரு குறிசொல்லுகிற பெண்ணுள் இருந்த அசுத்த ஆவியைப் துரத்தியதால் அவளுடைய முதலாளிகளுக்கு கடுங்கோபம் வந்தது. அதன் விளைவாக பவுல் சிறைச்சாலையிலே போடப்பட்டார். பவுல் இரட்சிப்பின் வழிகளை அறிவித்திருப்பார் என்பது பொதுவாக அறிந்த ஒன்று (வசனம் 17,18). 20,21 வசனத்தில் சிறையதிகாரி ஒரு ரோமர் என்பதால் அவர் புறஜாதியார் அவிசுவாசி என்று தெரிகிறது. அவர் எப்போதாவது ஒரு சுவிசேஷப் பிரசங்கத்தை கேட்டிருப்பாரா என்று தெரியவில்லை. வசனம் 31 அவர்கள் இயேசுவானவர் மீது விசுவாசம் வைக்கும்படி சொல்லப்பட்டார்கள். ஆகவே விசுவாசம் கேள்வியினாலே வரும் (ரோம.10:17). மந்திரும்புதல் என்பது உள்ளடங்கியுள்ளது. ஏனெனில் சிறையதிகாரி அவர்கள் காயங்களைக் கழுவி அவர்களை அழைத்துச் சென்றார் பின்பு ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.



# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

*-J.C.Choate*



-தொடர்ச்சி...

அடுத்து என்னோடு கூட கலாத்தியர் 5:19-21க்கு திரும்புங்கள். இங்கே பவுல், "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா.5:19-21). இங்கு தேவனுடைய மனிதனை பட்டியலிடப்பட்டுள்ள பல கிரியைகளும் பழக்கவழக்கங்களும் ஊக்கமளித்து, அவைகளை அவன் மாம்சத்தின் கிரியைகள் என அழைக்கிறான். மாம்சத்தின் கிரியைகள் யாவை? அவைகள் எல்லாமே கெட்டகாரியங்கள் வேதனையை அளிப்பவைகள், அழிப்பவைகள், மற்றவர்களை வேதனைப்படுத்துபவைகள். எல்லா கெட்ட காரியங்களுக்கும் மத்தியில் குடிப்பழக்கம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதையும் கவனித்தீர்களா. அவை எது? அவை போதை தரும் மது பானங்கள் குடிப்பதினால் வருகின்ற சில காரியங்கள். இப்போது இவற்றினால் இழுக்கப்பட்ட மாம்சத்தின் கிரியைகளைச் செய்ய விருப்பமுடையவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் மதுபானங்களை அருந்துவீர்களானால், பின்பு நீங்கள் ஏற்கனவே இதில் சிக்கிக் கொண்டீர்கள்.

தொடர்ந்து நாம் வாசிக்கிறோம், "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" (எபே.5:18). மதுபானம் அருந்துவதைத் தடைசெய்ய விரும்பி அநேக கோட்பாடுகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல், "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" (1தெச.5:22) என எழுதியுள்ளார். அவர் நமது சரீரங்களைப் "...பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று" (ரோம.12:1) சொன்னார். 1கொரிந்தியர் 3:16,17 மற்றும் 1கொரிந்தியர் 6:18-20 அவர் நம்முடைய சரீரங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்றும் ஆனபடியினால் நாம் அவைகளை பாவத்தினால் அசுசிப்படுத்தக் கூடாது என்றும் அல்லது சரீரத்தின் ஆலயங்களை அழித்துப் போடவிரும்புகிறவர்களாக அதனுள் எந்த அசுத்தத்தையும் வைத்திருக்கக் கூடாதென்றும் சொல்கிறார்.

எப்போதாவது நீங்கள் மதுபானம் அருந்துகிறவர்களை, அப்பேர்பட்ட மக்களை, மேலும் அவர்கள் மதுஅருந்த எங்கே செல்கிறார்கள் என்பதை கவனித்திருக்கிறீர்களா? மிகவும் கெட்ட மனிதர்களே மதுஅருந்துகின்றனர். கொலைசெய்பவர்கள், பொய்யர், திருடர், ஒழுக்கங்கெட்டவர்கள், இன்னும் இதுபோன்ற பல கெட்ட செயல் செய்பவர்கள். ஆனால் நீங்கள் கண்டிப்பாக நாங்கள் இவ்வகை பிரிவைச் சேர்ந்தவர்களல்ல எனக் கூறவேண்டும். நீங்கள் இப்போது இப்படியில்லையென்றால், நீங்கள் அங்கே இருப்பதற்கு முன் இதை விட்டு விட எவ்வளவு நாட்கள் எடுக்கும்? பாருக்குப்போய், இரவு விடுதிக்குச் சென்று, இன்னும் கெட்ட காரியங்கள் எங்கெல்லாம் நடந்துகொண்டேயிருக்கிறதோ அங்கெல்லாம் சென்று மேலும் அங்கே எப்போதும் திடமான சட்டரீதியாகவோ அல்லது சட்டத்தைமீறியோ கிடைக்கும் இடத்திற்குச் செல்வீர்கள்.

திடமான மதுபானத்தை விளம்பரப்படுத்துபவர்கள் எப்போதும் புத்திக்கூர்மையுள்ளவர் பயன்படும் மதுவகை போலவும், செல்வந்தர்கள், சினிமா மக்கள், பிரபல்யமான விளையாட்டு வீரர்களின் உருவங்களையும் மற்றும் இதுபோன்ற பலவற்றையும் போல படங்களை சித்தரிப்பார்கள் அவர்கள் நீங்கள் முக்கியஸ்தர்கள் என நம்பசெய்யவும் அல்லது அவர்களைப் போல நீங்களும் இருக்க விரும்புவீர்களானால் நீங்களும் மது அருந்துவீர்கள் எனவும் இப்படிச்செய்கிறார்கள். ஆனால் அவர்கள் உங்களுக்கு குடி மயக்கத்தின் சந்தோஷத்திலிருக்கும் எல்லா படங்களையும் காண்பிக்க மாட்டார்கள். அவர்கள் தங்களது வாழ்வை வீணாக்கி தங்களது உடல் நலத்தை தங்கள் குடும்பங்கள் மற்றும் எல்லாவற்றையும் திடமான மதுபழக்கத்தினால் கெடுத்துக்கொள்ளுகிறவர் களாயிருக்கிறார்கள். இல்லை, அவர்கள் எல்லா பட விளம்பரங்களையும் காண்பிப்பதில்லை, ஆனால் கண்டிப்பாக நீங்கள் என்ன நடக்கிறது எப்போது ஒருவன் மது அருந்த துவங்குகிறான் என்பதையும் கண்டிருக்கிறீர்கள்.


நீங்கள் புத்திசாலிகளாயிருந்தால், என்னுடைய நண்பரே, நீங்கள் முழுவதுமாக திடமான மது பானத்தை தவிர்த்து விடுவீர்கள். முதலாவது மதுபானத்தை குடிக்காதீர்கள். உங்கள் வீட்டிற்குள் நுழைய அனுமதிக்காதீர்கள். உங்கள் குடும்பத்தின் முன் ஒரு கெட்ட மாதிரியாக இருக்காதீர்கள். உங்களை மதுபானம் அழித்துவிட அனுமதிக்காதீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களை மது அருந்தும்படி தூண்டுவதற்கு அனுமதிக்காதீர்கள். அவர்கள் மதுஅருந்தினால் நீங்களும் மதுஅருந்தும்படி அவர்கள் விரும்புவார்கள் ஆகவே நீங்கள் அவர்களிடம் குற்றம் கண்டுபிடிக்க இயலாது.

ஒரு குடிப்பழக்கமுடையவன் இவ்வுலகிலும் மற்றும் வரவிருக்கும் உலகிலும் காப்பாற்றப்பட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிச்சயமாக மது அருந்துகிற ஒருவன் தன்னுடைய மது அருந்தும் பழக்கத்திற்காக மனந்திரும்ப அல்லது அதை விட்டு விலகி, கிறிஸ்துவுக்குள் தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, தன்னுடைய பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு



## நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்?
## What Must I Do To Be Saved?
பாடம் - 30

-Jerry




அப்போஸ்தலர் 16:30

1. மனிதன் எப்போதும் கேட்கக்கூடிய மிகப்பெரிய கேள்வி என்ன?

ஒரு வியாபாரி எப்படி பெரும் செல்வத்தை அடையளாம் என்று சொல்லலாம்.

சிலர் மனிதனுடைய பெரும் வியாதி குணமாவதைப் பற்றி சொல்லலாம் புற்றுநோய், இதய நோய் மற்றவை.

அரசியல்வாதி எப்படி தேசங்கள் மத்தியில் சமாதானத்தைக் கொண்டு வரலாம் என்று சொல்லலாம்.

2. ஆனால் வேதாகமத்தை நம்புகிற யாவருக்கும் நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்? என்பதுதான் கேள்வியாக இருக்கவேண்டும். இது மனித ஆத்துமாவின் நித்திய முடிவைப்பற்றியது.

இயேசு சொன்னார் மனிதன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபமென்ன? அல்லது மனிதன் தன் ஆத்துமாவுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான் (மத்.16:26).

3. மிக முக்கியமான கேள்விகளை விட்டுவிட்டு அற்பமான கேள்விகளைப் பற்றி நாம் கவலைப்பட்டுக் கொண்டிருப்போம்.

4. பாவிகள் தங்களை இழந்த நிலையில் இருக்கிறார்கள் என்ற உண்மையை உள்ளடக்கியதே அந்தக் கேள்வி. பாவிகள் பாவத்தில் தங்களை இழந்த நிலையில் இருக்கிறார்கள் என்ற பொருள்பட இக்கேள்வி உணர்த்துகிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்தவர்கள் பாவமன்னிப்புக்கான தங்கள் தேவையை உணர்ந்திருந்தனர்.

5. இரட்சிப்பு நிபந்தனைக்குட்பட்டது என்பதையும் இந்தக் கேள்வி உணர்த்துகிறது. அது எல்லாருக்கும் கொடுக்கப்படுவதில்லை. தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணராகி (எபி.5:9) என்றெழுதப்பட்டுள்ளது.

6. மனிதனிடம் தேவைப்படும் ஒன்று உண்டு என்பதை இது குறிப்பாக தெரிவிக்கிறது. கர்த்தர் சொல்லுவதை பாவத்தில் தன்னை இழந்து போயிருக்கிறவர் அவர் சொன்னபடிச் செய்ய வேண்டும்.

7. கட்டாயமாக இது ஏதோ விருப்பத்திற்கேற்ப செய்யப்படுகிற செயலல்ல. அது ஒட்டு மொத்தத் தேவையுமல்ல. அது ஒரு அவசர உணர்வைத் தன்னுடன் எடுத்துச் செல்லுகிறதாயிருக்கிறது. (எடுத்துக்காட்டு எத்தியோப்பிய மந்திரி).

8. நான் என்கிற வார்த்தை மீட்பின் திட்டத்தில் தனிமனிதனுடைய பொறுப்பைக் குறிப்பிடுகிறது. தேவன் அவருடைய பகுதியைச் செய்துவிட்டார். நம்முடைய பெற்றோர்களோ அல்லது தாத்தாபாட்டிபோன்றவர்களோ அல்லது மற்றயாரோ செய்ததைப் பற்றி கவலைப்படுகிறவர்களாயில்லை.

9. செய் என்பது நான் எப்படி உணர்கிறேன் அல்லது எனக்கு என்ன செய்யப்படவேண்டும் என்பதல்ல. இது இரட்சிப்பில் இரட்சிக்கப்படுகிற மனிதனின் பங்காக

**அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்"** என்றெழுதினார். கிறிஸ்து ஒரே மாதிரியைப் பின்வைத்திருக்கிறார் மற்றவர்களுக்காக மாதியை முன்வைக்கவும் தருணத்தையும், சகாயத்தையும் பெற்றிருக்கிறோம்.

**வேதாகமம் இதுகுறித்து என்ன சொல்லுகிறது?**

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு நல்மாதிரியை முன் வைக்க வேண்டும். இயேசு தாமே தம்முடைய சீஷர்களுக்கு இதைச் செய்தார். இயேசு தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவிய போது மாதிரியை காண்பித்தார் (யோவா.13) என்பதை நினைக்கவேண்டும். இதைச் செய்த பின் இயேசு, **"நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்"** என்றார் (யோவா.13:15). நாம் நம்முடைய வாழ்வில் அவர் செய்தது போல செய்யும்படி அவர் தாமே தம்முடைய ஜீவியத்தில் ஓர் நல்ல மாதிரியாக வாழ்ந்து காண்பித்தார். நாம் ஏற்கனவே 1பேது.2:21 ல் பேதுருவின் வார்த்தைகளைப் பார்த்தோம். தேவன் நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி விரும்புகிறார். அப்போஸ்தலனாகிய பவுலும்கூட கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுவதைக் குறித்து 1கொரி.11:1 ல் "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்றார். கிறிஸ்துவைப்போல நாம் ஜீவிப்பதும் நம்முடைய சொந்த ஜீவியத்தில் வெளிப்படையாக அவரைப் பிரதிபலிப்பதும் மேலும் மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்வதும் நம்முடைய இலக்காக இருக்கிறது. பிலிப்.2:3-9 ல் இதன் பொருள் என்னவென்று பவுல் நமக்கு விளக்கமளிக்கிறார்:

**ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.**

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாகக் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.**

கிறிஸ்துவின் ஜீவியத்திலும் மரணத்திலும், அவர் தன்னலமற்றவராகவும் எப்போதும் மற்றவர்களிடத்தில் அன்பு நிறைந்தவராகவும் இருந்தார் என நிரூபித்தார். இது கிறிஸ்துவின் மாதிரியின் மரணசாசனப் பொருளாயிருக்கிறது. இதே காரியத்தை செய்வதன் மூலம் நாம் நம்முடைய ஜீவியத்தில் இந்த மாதிரியைப் பின்பற்றவேண்டும். இதன் காரணமாகவே அப்போஸ்தலனாகிய பவுல் வாதினாலாவது நாம் எதையும் செய்யக்கூடாது ஏனென்றால் அது கிறிஸ்துவின் நிலைபாடு அல்ல என்கிறார். நாம் மற்றவர்களுக்கு முதலிடம் தரும்போது நமக்கானதை விட மற்றவர்களின் நலனை கருத்தில் கொள்ளுகிறோம். இவ்விதமாகச் செய்கையில், நம்முடைய சொந்த சுய விருப்பங்களை முன்னிலைப்படுத்துகிறோம். இதைச் செய்யும்போது மற்றவர்கள் நம்முடைய மாதிரியைக் கண்டு தேவனை மகிமைப்படுத்துவார்கள். இது நாம் என்ன செய்யவேண்டும் என்பதை இயேசு மத்தேயு 5:16 ல் **"இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது"** என்று சொன்னார்



வர இயலும் அதன் பிறகு கர்த்தர் அவனை இரட்சித்துக் கொள்வார். ஆனால் இது திடமான மது அருந்துவது போன்ற கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விலகி தேவனுக்கு கீழ்ப்படியும் போதுதான் அவன் இரட்சிக்கப்பட முடியும். நீங்கள் கேள்விப்பட்டிருக்கிற சத்தியத்தையும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மது அருந்தவே மாட்டார்கள் என்பதையும் குறித்து கவலையற்றவர் களாயிருந்தாலும் கூட நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் குடிப்பழக்கமுள்ளவர் என்று அழைக்கப்பட விரும்ப மாட்டீர்கள். ஆனபடியினால், மது அருந்தாதீர்கள், அல்லது நீங்கள் மது அருந்தினால், அந்த அசுத்தமான, ஊதாரித்தனமான, அழிவுள்ள பழக்கத்திலிருந்து வெளி வர தீர்மானியுங்கள். மது அருந்தும் பழக்கம் நற்பழக்கமல்ல, ஆனால் மது அருந்தாமலிருப்பது நற்பழக்கமாகும்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறிவிடுவீர்கள் என நான் நம்புகிறேன். மேலும் கிறிஸ்து இந்த கெட்ட பழக்கத்தை மேற்கொள்ளவும் அல்லது இதிலிருந்து விலகியிருக்கவும் உதவிசெய்வாராக!

இக்காரியங்களில் நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய முடியுமானால், அதிகமாக புத்தகங்கள் அல்லது உங்களுடைய கேள்விகளுக்கு பதில்களை அனுப்பிவைக்கிறோம். தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள்.

**தெரிந்துகொள்வோம்** சிலந்தி பூச்சி *-K.R.K.Ravi Asir*



- சிலந்தியை எட்டுக்கால் பூச்சி என்றும் கூறுவர்
- சிலந்திக்கு கால்கள் எட்டு, கண்களும் எட்டு
- சிலந்தியின் உடல் இரண்டு பகுதியாக காணப்படுகிறது.
- சிலந்திக்கு விஷப்பை அதன் உடலை விட்டு வெளிப்பகுதியில் அமைந்துள்ளது.
- சிலந்திகள் மிகவும் நுண் அறிவு கொண்டவை.
- சிலந்தி வலைபின்னுவது விடிகாலையிலோ அல்லது மாலை நேரத்திலோதான். இதற்கு முக்கய காரணம் உண்டு. இந்த நேரத்தில் தான் பூச்சிகள் அதிக அளவில் அங்குமிங்கும் பறந்து திரியும் அதனால் அவற்றை வலையில் சிக்கவைப்பதற்காக சிலந்திகள் இந்த நேரத்தில் மட்டுமே வலை பின்னுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன.
- சிலந்திகள் பின்னும் வலை வட்டவடிவிலே அல்லது எண்கோண வடிவிலேதான் இருக்கும்.
- சிலந்திப் பூச்சிகளுக்கு உணர்வுக் கொம்புகளோ, இறக்கைகளோ இல்லை என்பதால் இவற்றை விலங்கியல் ஆய்வாளர்கள் பூச்சியினத்தில் சேர்ப்பதில்லை ஆனாலும் சொல் வழக்கில் பூச்சி என்பது நிரந்தரமாகிப் போய்விட்டது.

பெண்கள் பகுதி

# மனோநிலைகள்
# Attitudes

-Betty



வியாதியுடன் இருப்பதாக கூறின கிறிஸ்தவர்களைச் சந்திக்க தானாக முன்வருபவர்கள் அழைக்கப்பட்டனர்.

**டாம்:** வேண்டாம், என்னை அழைக்காதீர்கள் எனக்கு என்ன சொல்லுவதென்று தெரியாது. மேலும், நோய் என்னை சோர்வடையப்பண்ணுகிறது"

**ஸ்காட்:** நான் போகிறேன். ஒருவேளை என்னால் சில உதவி செய்யமுடியும். வியாதியஸ்தர்களைப் பார்ப்பதினால் என்னுடைய உடல் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது என்று நான் எவ்வளவு நன்றியுள்ளவனாயிருப்பது எத்தனை அவசியம் என என்னை அதிகமாக நினைவு படுத்துகிறது மேலும் படுக்கையில் படுத்துக் கொண்டு, வேதனையை அநுபவித்துக் கொண்டு, யாராவது வந்து போதுமான அளவு பராமரிப்பார்களென்றால் அது ஆச்சிரியமாயிருக்கும் என்பவர்களை பார்க்கவேண்டியது என்னுடைய வேலையாயிருக்கிறது"

**வாழ்க்கையினாலும் சாவால்களினாலும் களைப்பு**

**பெத் கேள்விப்பட்டதை குறிப்பிடுகிறாள்:** "நான் ஒவ்வொன்றினாலும் மிகவும் சோர்ந்து போய் கொண்டிருக்கிறேன். கால அட்டவணையை வைத்துக்கொண்டிருக்க வேண்டியது, செலுத்தவேண்டிய ரசீதுகள். நான் பிடித்துக் கொள்வது ஒருபோதும் முடியாதது, கூடுதல் நேரத்தை ஒருபோதும் பெற்றிருக்காதது அல்லது பணம்; ஒவ்வொன்றும் சரியான போராட்டம் போல் காண்கிறேன்".

**அனிதா புன்முறுவல்செய்தாள்:** சில நேரங்களில் நான் நினைக்கிறேன், நான் மிகவும் சோர்வாக இருப்பதைப் போலவும், இதைவிட்டு நான் உடனே வெளிவர வேண்டுமென நான் விரும்புகிறேன்", ஆனால் பின்பு என் குடும்பத்தில் மிக மோசமான நிலையில் வியாதியுள்ள சிலரை கவனிக்கவேண்டும், அல்லது எனது கணவர் வெளியூர் சென்றுள்ளார், அல்லது மகனை அல்லது மகளை பயங்கரமான நிலையில் என் குடும்பங்களில் இழந்திருக்கிறேன் அல்லது எங்கள் குடும்பங்கள், தேவனை விட்டு விலகிப் போயிருக்கிற குழந்தைகள் அல்லது இப்படிப்பட்ட உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்கின்றனர் அதன்பின் நான் இவ்வூழியத்தை எவ்வளவு சந்தோஷமாக செய்யவேண்டியவளாய் இருக்க வேண்டும் என நான் அறிகிறேன், எனக்கு எந்த ஒரு உண்மையான பிரச்சனை அல்லது வாழ்வதற்கான பெரிய கவலை ஒன்றையும் கொண்டவளாயிருக்கவில்லை ஆகவே கவலைப்படுவதின் மூலமும் சிறிய காரியங்களைக் குறித்து புகார் செய்து கொள்வதின் மூலமும் எனது சொந்த கஷ்டத்தின் சூழலை உருவாக்குகிறேன். அதன் பின் அது எவ்வளவு சிறிய விஷயம் என வெட்கப்பட்டேன். நான் பெற்றுள்ள எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களை



## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
## Evangelizing Our Friends

-TVOTI

**ஒரு நல்ல மாதிரியாக இருத்தல்**
**உன்னுடைய நண்பர்களுக்கு உதவுகிறது**
**பிரிவு 1, பாடம் -7**
Being a Good Example Helps Your Friends



**மனப்பாட வசனம்:**
**(மத்தேயு 5:16)**
**"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது"**

**முன்னுரை:**

நாமெல்லாரும் நம்முடைய வாழ்வில் மற்றவர்கள் நமக்கு உதவும்படி எதிர்பார்க்கிறோம். உங்கள் வாழ்வில் நீங்கள் யாரை நாடுகிறீர்கள்? நம்முடைய வாழ்வில் அதிகமாக மற்றும் நீடித்த செல்வாக்கு செலுத்துகிற நம்முடைய பெற்றோர்களே நமது முதலாவதும் முடிவுவரையும் மாபெரும் மாதிரிகளாக இருக்கிறார்கள். பின்பற்றும்படிக்கு நமக்கு ஓர் மாதிரியை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். ஓர் மாதிரி என்பது மற்றவர்களுக்கு முன்பாக நடத்திக்காட்டும் நடத்தையின் ஒரு உதாரணம், வடிவம் அல்லது எடுத்துக்காட்டு ஆகும். ஒரு நபரின் வாழ்வில் பெற்றோர்கள் தலைமைத்துவத்தில் முதல்தரமான செல்வாக்கு செலுத்துவதில் உறுதியான தகுதியினை அளவீடு செய்கின்றனர். அவர்கள் நாம் எப்படி வாழவேண்டும் என்பதற்காக இறுதிவரையான நம்முடைய நடத்தைகள் பழக்கவழக்கங்களை நம் மனதில் பதியவைக்கும்படி, நாம் குடும்பத்தைவிட்டு வெளியேறினாலும் தொடர்ந்து நம்மை வழிநடத்தும்படி ஒரு மாதிரியை வைக்கின்றனர். ஆனால் அதைப்போல மற்றவர்களும் நமக்கு மாதிரியை வைத்துப் போகின்றனர். அவர்களெல்லாரும் யார்? அவர்கள் நண்பர்கள், அண்டையில் வசிப்போர், ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், அரசியல்வாதிகள், பிரசங்கியார்கள், சமூகத் தலைவர்கள், உடற்பயிற்சி நிபுணர்கள் மேலும் திருச்சபை அங்கத்தினர்கள் ஆவர்.

உங்களுடைய மனதைத் தொட்ட அவர்களுடைய மாதிரியைப் பற்றிய காரியத்தில் நீங்கள் விருப்பமுடையவர்களாயிருக்கிறீர்களா? பல நேரங்களில் நாம் அவர்களுடைய பக்தியுள்ள நடத்தைகள், பிறரிடம் உற்சாகம், தன்னலமற்றதன்மை, தியாகம் மற்றும் ஒப்புக்கொடுத்தல் போன்ற பலவற்றை நாம் ரசிக்கின்றோம். நம்முடைய மனதை அதிகமாகத் தொட்ட இந்த மாதிரிகள் வழக்கமாக மற்றவர்களை எவ்விதம் நடத்துகிறது. இவையெல்லா மாதிரிகளைக் காட்டிலும் எப்போதும் உண்மையுள்ள, தன்னலமற்ற, ஊக்கமளிக்கின்ற, அர்ப்பணிக்கப்பட்டுள்ள, நமக்காகவும் நம்மெல்லாருக்காகவும் மாபெரும் - இயேசு கிறிஸ்துவையே நாம் ஒரே ஒரு மாதிரியாகக் கொண்டுள்ளோம். பேதுரு 1பேது.2:21 ல் **"இதற்காக நீங்கள்**

## பொது அறிவு சோதனை

1. பொதுவாக ராட்சத பலூன்களில் நிரப்பப்படும் வாயு எது?
அ) ஹைட்ரஜன் ஆ)ஹீலியம் இ) ஹைட்ரஜன் சல்பைடு
2. காலிபிளவரில் நாம் உண்ணக்கூடிய பகுதி எது?
அ) மஞ்சரி ஆ)பூ இ) பூமொட்டு
3. திடீர் மாற்றக்கோட்பாட்டை விளக்கியவர் யார்?
அ) டார்வின் ஆ) மோர்கன் இ) லாமார்க்
4. பறவைகள் மூலமாக மகரந்த சேர்க்கை நடைபெறதலுக்கு என்ன பெயர்?
அ) ஆர்னித்தோபிலி ஆ) அனிமோபிலி இ) ஹைட்ரோபிலி
5. விளையாட்டு வீரர்களுக்கு உடனடியாக சக்தி தரும் பொருள் எது?
அ) குளுக்கோஸ் ஆ) வெண்ணெய் இ) புரதம்

விடைகள்: 1. ஆ 2. அ 3. ஆ 4. அ 5. அ

## ஜெபியுங்கள்

- வருடந்தோறும் நடைபெற்றுவரும் வேல்டு இவான்சலிசம் ரிட்ரீட்டுக்காக...
- அடுத்த மாதம் புதியவருடத்திற்குள்ளாக நமது மாத இதழ் செல்வதற்காக...
- ஒவ்வொரு நாளும் புதிய ஆத்துமாக்கள் கிடைக்க...
- சுவிசேஷ தடைகள் நீங்க...
- ஒவ்வொரு விசுவாசியும் ஊழியம் செய்ய...



**இலங்கை ஆசியசேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.15 மணி முதல் 5.30 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

## ஜீவி விருட்சம்

*M.Murugan*

- 12 விதமான கனிகளைத் தரும் — வெளி.22:2
- பரதீசின் மத்தியில் இருக்கும் — வெளி.2:7
- ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு — வெளி.2:7
- நீதிமானின் பலன் — நீதி.11:30
- ஆரோக்கியமுள்ள நாவு — நீதி.15:4

**நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம் போல் இருக்கும்**
**நீதிமொழிகள் 13:12**



உணர்ந்து பார்க்க உதவும்படி தேவனை நோக்கி ஜெபிக்கிறேன், அதற்குமுன் நான் என்னுடைய மனோநிலையினிமித்தம் இவைகளை இழந்திருக்கக் கூடும்.

நீங்கள் முற்றிலும் எதிர்மறையான மனோபாவத்தையும் ஒரே சூழ்நிலை விளைவின் பயனைப் பிறப்பித்ததையும் இது வாழ்க்கை முறையில் விளக்கப்பட்டுள்ளதை பார்த்தீர்களா? இல்லை, இது உண்மையான சந்தர்ப்பம் அல்ல அல்லது பயங்கரமானது அல்லது நல்ல சமயங்கள் அல்லது அவைகளின் இழப்பு இவைகளெல்லாம் நம்முடைய வாழ்வை வடிவமைக்கிறது இது நமது வழியில் வருகிற ஒவ்வொரு நிகழ்வுக்குமான நேரடியான பதிலில் நம்முடைய சொந்த மனோபாவம் உள்ளது. நாம், நாமே இது ஆசீர்வாதமாக இருக்கும் அல்லது சாபமாக இருக்கும். நாம் வளர்ச்சியடைவோம் அல்லது இதனால் வறண்டு போய்விடுவோம் என தீர்மானிக்கிறோம்.

**மோசே சொன்னார்:** "இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன், இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந் தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாவிட்டால்.... சாபமும் வரும்" (உபா.11:26,27) என்றார்.

கற்பனைகள் எல்லா ஜனங்களுக்கும் ஒரேமாதிரியாக இருந்தது; ஆசீர்வாதம் ஒருவர் வாழ்விலும் சாபம் இன்னொருவர் வாழ்விலும் இருந்தது இந்த வித்தியாசம் கற்பனைகளுக்கு அவர்களுடைய பிரதிக்கிரியையாக இருந்தது.

**பவுல் சொன்னார்:** "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற் கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம்" (2கொரி.2:16).

கிறிஸ்தவனும் அவனுடைய செய்தியும் பலவருடங்களாக ஒரே விதமாக நிலைத்திருக்கிறது வேறுபட்ட செய்தியை கேள்விப்படுகிறவர்களில் மட்டுமே இருக்கிறது நாம் ஒவ்வொருவரும், நாம் எப்படி கேள்விப்படுகிறோம், நாம் எப்படி பதிலளிக்கிறோம் என்பனவற்றில் கவனமாயிருக்கவேண்டும். நம்முடைய மனோநிலைகள் பரலோகத்திற்கு அனுப்பப்படும் அல்லது நரகத்திற்கு அனுப்பப்படும். நாம் அவைகள் மேலுள்ள நம்முடைய பாதுகாப்பில் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

## நடப்புச்செய்திகள்

- பிற மாநிலங்களை காட்டிலும் தமிழகம் தொழில்துறையில் சிறந்து விளங்குகிறது என துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு கூறினார்.
- சோயுஸ் ராக்கெட்டில் ஏற்பட்ட கோளாறால் அவசரமாக தரை இறங்கியது. இதனால் இரண்டு வீரர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.
- டெல்லி கண்டோன்மென்ட் – ரிவாரி இடையே இயக்கப்படும் 163 ஆண்டு பழைமையான 'தேவதை ராணி' என்ற நீராவி ரெயில் என்ஜின் சென்னையில் மீண்டும் புத்துயிர் பெற்று திரும்பியது.

பெண்கள் பகுதி

# பெண்ணாய் பிறந்தவளே
# O! Ye Who Born As A Woman

-Glory Arjunan



**பெ**ண்ணாக பிறந்துள்ள அன்பு சகோதரியே, உன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாயா? "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்" என்று நீதிமொழிகள் 12:4 கூறுகிறது. உலக வழக்கில் ஒரு ஆணின் முன்னேற்றத்திற்குப் பின்னால் ஒரு பெண்ணிருக்கிறாள் என்கின்றனர். நீங்கள் உங்களுடைய புருஷருக்கு ஏற்றதுணையாக இருந்து அவருடைய முன்னேற்றத்திற்கு ஊக்கமளிப்பவராக இருக்கிறீர்களா? அல்லது அது உங்களுடைய வேலை உங்களுடைய வேலைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்கிறீர்களா? நிச்சயமாக ஒரு குணசாரியான ஸ்திரீ புருஷருக்கு புகழ்ச்சியைக் கொண்டுவருவாள். யார் அந்த குணசாலியான ஸ்திரீ? நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் குணசாலியான ஸ்திரீயைப் பற்றி ஒரு பெரிய பட்டியலே கொடுக்கப்பட்டுள்ளது.

குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது அவள் தன் புருஷனையும் தன் வீட்டாரையும் தன் வேலைக்காரர்களையும் நன்கு கவனிக்கிறாள். எனவே அவள் வருங்காலத்தைப் பற்றி கவலை கொள்ளாமல் மகிழ்கிறாள். ஆனால் இன்றைய சகோதரிகள் நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படுகின்றனர். அதிலும் பெண்குழந்தைகள் பிறந்துவிட்டாள் அவ்வளவு தான்! வசனம் கூறுகிறது "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" (சங்,127:4) என்று. இப்படியிருக்க கர்த்தர் உங்கள் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளமாட்டாரா? அவர் வருங்காலத்திற்கும் தேவனாயிருக்கிறார். ஒரு குணசாலியான ஸ்திரீ ஒன்றுக்கும் கவலைப்படாமல் தன் புருஷனுக்கும் தன் வீட்டாரனைவருக்கும் ஏற்ற தன் கடமைகளைச் செய்தால் நிச்சயம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாள். அவளுடைய குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும். ஸ்திரீகள் செய்யவேண்டுவதெல்லாம் சிறுவயதிலேயே தன் பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் கற்றுக் கொடுக்கவேண்டும்.

பாருங்கள்! நோவா காலத்தில் நோவாவின் மனைவி தன் புருஷன் நோவாவிற்குக் கீழ்ப்படிந்திருந்ததுமட்டும்மல்லாது தன் பிள்ளைகள் மூவரும் தன் மருமக்கள் மூவரும் கீழ்ப்படிந்திருந்தபடியினால் ஜலத்தின் அழிவிற்கு தப்பிக் காக்கப்பட்டார்கள். மேலும் பேழையை விட்டு இறங்கியதும் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் அமைத்து நன்றி செலுத்தினார்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் யோபுவின் மனைவியோ சொத்தாசை பிடித்தவளாக அத்தனையும் இழந்துவிட்டோமே



எனக்கருதி யோபுவை பார்த்து: "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்" (யோபு 2:9). நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம் வந்தபோது தன் உடமைகள் எல்லாமே ஜலத்தில் அழிந்துபோயிருக்கும். ஆனால் அவன் மனைவியோ பொருளாசைப்பிடித்தவளாகக் காணப்படவில்லை என்று தான் கருதவேண்டும். அப்படிப் பொருளாசையுடைவளாயிருந்திருப்பாளேயென்றால் நிச்சயம் நோவாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து இருக்கமாட்டாள்.

இன்றைய சகோதரிகள் அநேகர் பொருளாசையுடையவர்களாய் யோபுவின் மனைவியைப் போல தன் கணவனை போடா வாடா என்று கூட பேசி விடுகின்றனர். இப்படிப் பேசுவது நிச்சயமாக ஒரு கிறிஸ்தவ ஸ்திரீக்கு அழகல்ல. ஒரு உண்மையுள்ள, வசனத்தைக் கைக்கொள்ளுகிற கிறிஸ்தவள் நிச்சயமாக தன் புருஷனுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையையும், கனத்தையும் செலுத்தியே ஆக வேண்டும். ஏனென்றால் நாம் நம் புருஷர்மார்களுக்கு ஏற்ற துணையாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம். துணையாக இருப்பவள் அதிகாரியாக மாற முடியாது. எனவே பவுல் ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை..." (1தீமோ.2;11) என்கிறார். ஏனென்றால், "ஆதாம் பிசாசினால் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" (1தீமோ.2;13) எனவே குற்றஞ் செய்த நாம் மனசாட்சியில் குத்தப்பட்டவர்களாக அடங்கி ஒடுங்கி தம் தம் புருஷருக்குக் கிரீடமாயிருக்க வேண்டும்.

சாராள் என்ற ஸ்திரீயைப் பற்றி கிறிஸ்தவ பெண்கள் நன்கு அறிந்திருப்பார்கள். இவள் தன் புருஷன் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள் (1பேது.3:6). பாருங்கள், அவளுடைய நடக்கையைக் கண்ட தேவன் அவளை எவ்வளவாய் கனப்படுத்தியுள்ளார். அவள் விசுவாசிகளின் தாய் எனக் கருதப்படுகிறாள். உலகிலுள்ள அத்தனை விசுவாசிகளுக்கும் அவள் தாய் என்றால் என்னே பெரிய பாக்கியம் பெற்றுள்ளாள்!

அன்பு சகோதரிகளே! கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாகவே, கிறிஸ்துவையுடையவர்களாகவே இருக்கப் பிரயாசப்படுங்கள். நீ, வா என்று பேசுவதும் போடா, வாடா என்று பேசுவதும் உங்கள் புருஷனுக்கு புகழையும், கிரீடத்தையும் கொண்டுவராது. புறஜாதி ஸ்திரீகள் எப்படி எப்படியோ பேசுவார்கள் அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை. அவர்களைப் பின்பற்றவும் கூடாது என வேதம் கூறுகிறது. "புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளாதிருங்கள்" (எரே.10:2). பெண்ணாய் பிறந்தவளே, குணசாலியான ஸ்திரீயாகயிருந்து உன்னுடைய புருஷருக்கு கிரீடமாகவும், புகழ்ச்சியாகவும் காணப்பட தேவன் தாமே உதவிசெய்வாராக ஆமென்.